குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்
முன்னிலை – திரு.R.கைலாஷ், பி.ஏ., பி.எல்.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், சீர்காழி
2026 ஆம் ஆண்டு ஜீன்–06 ஆம் நாள் சனிக்கிழமை

**CRLMP.No.727/2026**

**CNR.No.TNMY08-001770-2026**

ராஜா 65/2026,
த/பெ.குஞ்சு . …………. மனுதாரர்/எதிரி

/எதிராக/

காவல் ஆய்வாளர்,
சீர்காழி காவல் நிலையம்,
Cr.No.188/2026
U/s.7(3) of Lottery Act ..........எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு என் முன்பாக இன்று 06.06.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் உதவி வழக்கறிஞர் நிலை–II திருமதி. K. நிவேதா அவர்கள் ஆஜராகியும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்…

**உத்தரவு**

I) மனுதாரர்/எதிரி தரப்பில், சட்ட பிரிவு 480 BNSS ன் கீழ் **முதல் பிணை மனு** தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி மீது சீர்காழி காவல் துறையினர் 31.05.2026 அன்று Cr.No.188/2026, U/s. 7(3) of Lottery Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து, 31.05.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். மேற்படி வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், மனுதாரர்/எதிரி தலைமறைவு ஆகமாட்டார் என்றும், எதிரி இவ்வழக்கு குற்ற செயலில் ஈடுபடவில்லை என்றும், தகுந்த பிணையதாரர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த தயாராக உள்ளதாகவும், மேற்படி மனுதாரர்/எதிரியை விடுவிக்கும்பட்சத்தில் நீதிமன்றம் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாக மனுதாரர்/எதிரி தரப்பில் வாதிடப்பட்டது.

ii) எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில், எதிரி சீர்காழி காவல்நிலைய குற்ற எண் 188/2026 ச/பி 7(3) of Lottery Act இவ்வழக்கின் எதிரியை பிணையில் விட்டால் மீண்டும் இதே குற்றச்செயலில் ஈடுபடக்கூடும் என்பதால் கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கானது விசாரணை நிலையில் உள்ளதாகவும், மனுதாரர்/எதிரிக்கு பிணை கொடுத்தால் எதிரி சாட்சிகளை மிரட்டி கலைக்கக்கூடும் என்பதாலும், இதுபோன்ற குற்றச்செயலில் மீண்டும் ஈடுபடவும், தலைமறைவாகவும் வாய்ப்புள்ளது என்றும் கூறி மேற்படி எதிரிக்கு பிணையம் வழங்க ஆட்சேபனையை உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II மற்றும் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

iii)இருதரப்பு வாதங்களும் ஆவணங்களும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.06.06 17:47:54 +0530

மனுதாரர்/எதிரி மீது சீர்காழி காவல் துறையினர் 31.05.2026 அன்று Cr.No.188/2026 U/s.7(3) of Lottery Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து, எதிரி கைது செய்யப்பட்டு 31.05.2026 தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பது தெரிய வருகிறது. இவ்வழக்கானது, போலிசார் தங்களது வழக்கமான கண்காணிப்பு மற்றும் சோதனையின் போது, அரசாங்க அனுமதியோ அல்லது உரிமமோ இன்றி தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை விற்பனைக்காக வைத்திருந்த எதிரியை மடக்கி பிடித்தது சம்மந்தப்பட்டதாகும். இந்நிலையில், இந்த வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும், இவ்வழக்கில் சாட்சிகள் அனைவரும் காவல்துறையை சார்ந்தவர்கள் என்பதை கருத்தில் கொண்டும், புலன்விசாரணை ஏறக்குறைய முடிக்கப்பட்டு சாட்சிகளிடத்தில் வாக்குமூலம் பெறப்பட்டுவிட்ட நிலையிலும், எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் வழக்கு விசாரணைக்கு முறையாக ஆஜர் ஆவார், சாட்சிகளை கலைக்கமாட்டார், வழக்கு விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைப்பார் என்று எதிரி தரப்பில் கூறியுள்ளதை கருத்தில் கொண்டும் நீதியின்பால் **இந்த பிணை மனுவை அனுமதித்து** எதிரிக்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் பிணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1) எதிரி இவ்வழக்கில் முறையாக ஆஜராவதை உறுதிப்படுத்தும் விதமாக மனுதாரர்கள்/எதிரிகள் மற்றும் இரண்டு பிணையதாரர்கள் தலா ரூபாய் 25,000/- மதிப்புள்ள பிணை பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.

2) மனுதாரர்கள்/எதிரிகள் குற்றமுறையீட்டாளர் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் 20.06.2026ம் தேதி வரை தினந்தோறும் காலை 10.00 மணிக்கு நேரில் ஆஜராகி கையொப்பமிட வேண்டும்.

3) நீதிமன்றம் மற்றும் காவல் துறையினரின் வழக்கு விசாரணையில் தவறாமல் ஆஜராக வேண்டும்.

4) மனுதாரர்கள் சாட்சிகளை மிரட்டவோ, ஆதாரங்களை அழிக்கவோ முற்படக்கூடாது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ஆம் ஆண்டு ஜீன்-6 ஆம் நாள் ஆகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.06.06 17:48:00 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**சீர்காழி.**